# ரமலான் சந்தைச் செயல்பாடுகளில்

# மறுகட்டமைப்புப் பணிகள்



கோலாலம்பூர். டிச. 10-

கோலாலம்பூர் மாநகர மன்றம் தனது மேலாண்மைப் பகுதிகளில் ரமலான் சந்தை வியாபார நடவடிக்கைகளுக்காக மறுகட்டமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்தக் காலகட்டத்தில் வியாபார நடவடிக்கைகள் இன்னும் சீராக நடைபெறுவதை உறுதி செய்ய இப்பணிகள் முன்னெடுக்கப்படுவதாக பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.

மேலும் ரமலான் சந்தைக்கு வெளியிடப்படும் உரிமங்களின் எண்ணிக்கை, விதிக்கப்படும் வாடகை விகிதம் மீது ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதும் இந்தக் கட்டமைப்புப் பணிகளில் ஓர் அங்கமாகும்.

இது தவிர கேஎல் மடானி உரிமம் வைத்திருப்பவர்கள் ரமலான் சந்தையில் வியாபாரம் செய்ய முனைந்தால் அவர்கள் வழக்கில் உள்ள பதிவுத் தளத்தின் வாயிலாக கோலாலம்பூர் மாநகர மன்றத்தில் விண்ணப்பிக்கலாம்.

முன்னதாக எழுந்த பல்வேறு விவகாரங்களால் ரமலான் சந்தைச் செயல்பாடுகள் குறித்து மறுகட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே வியாபாரங்கள் வழக்கமாக, இன்னும் சீராக நடைபெறுவதை உறுதி செய்ய நம்மால் முடிந்த சிறந்ததை வழங்க முற்படுகிறோம் என்று நேற்று மக்களவை கேள்வி - பதில் நேரத்தில் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக ரமலான் சந்தையில் கேஎல் மடானி உரிமம் வைத்திருப்பவர்களின் ஈடுபாடு குறித்து கூலிம் பண்டார் பாரு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸ்லான் ஹஷிம் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் மேற்கண்ட தகவல்களைப் பகிர்ந்தார்.